**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.626/2025
Sessions)

Deposition of witness for ( Prosecution P.W.1
(Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | கலைச்செல்வி | -- | |
| Husband's Name | பாலமுருகன் | Calling | வியாபாரம் |
| Village | T. இராமநாதபுரம் | Religion | |
| Taluk | சிவகிரி | Age | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 09th day of January 2026.
Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது தென்காசி மாவட்டம், சிவகிரி தாலுகா, T.இராமநாதபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இராமநாதபுரம் பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் கம்ப்யூட்டர் ஆப்ரேட்டராக வேலை பார்த்து வந்தேன். தற்போது நான் வேலை எதுவும் பார்க்கவில்லை. எனது கணவருக்கு ஏற்பட்ட பக்கவாதத்தின் காரணமாக அவரும் வேலைக்குச் செல்லவில்லை. எனது அப்பா மாரியப்பன் முகவூரில் தங்கியிருந்து தளவாய்புரத்தில் உள்ள கிருஷ்ணா நெல் அரவை மில்லில் வேலை பார்த்து வந்தார். எனக்கு மலர்க்கொடி என்ற அக்காவும், தீபா என்ற தங்கையும் உள்ளனர். எனது அம்மா தென்காசி மாவட்டம் புளியங்குடி அருகில் உள்ள வேட்டாரம் பட்டியில் எனது அக்காவுடன் குடியிருந்து வந்தார். எனது அப்பா வாரம் ஒருமுறை அங்கு சென்று எனது அம்மாவை பார்த்து வருவார். 04.05.2024 ம் தேதி மம்சாபுரத்தில் உள்ள மாடசாமி கோயிலுக்கு நாங்கள் எங்கள் குடும்பத்தினருடன் சென்றோம். அப்போது எனது அப்பாவுடன் வேலை பார்க்கும் தங்கராஜீம் வந்திருந்தார். பின்னர் நாங்கள் இரவில் வீட்டிற்கு வந்துவிட்டோம் ஆனால் எனது அப்பா முகவூரிலேயே இறங்கிவிட்டார். பின்னர் 05.05.2021 ம் தேதி காலை 08.45 மணியளவில் தங்கராஜ் என்பவர் என்னிடம் போன் மூலமாக தான் எனது அப்பா மாரியப்பனை இருசக்கர வாகனத்தில் ஏற்றிக்கொண்டு மம்சாபுரம் சென்றுவிட்டு மீண்டும் திரும்ப வந்து கொண்டிருந்தபோது M.புதுப்பட்டி விலக்கில் எனது அப்பாவை இறக்கிவிட்டதாகவும் எனது அப்பா எதிர்த்தாற்போல் உள்ள இராஜபாளையம் பஸ்சில் ஏறுவதற்காக ரோட்டைக் வடக்கிலிருந்து தெற்காக கடந்த போது மதுரையிலிருந்து வந்த அரசு பேருந்த TN67N0981 வேகமாக வந்து எனது அப்பா ரோட்டை கிராஸ் செய்யும் போது

மோதி அதனால் எனது அப்பா கீழே விழுந்துவிட்டதாகவும், தங்கராஜ் அருகில் இருந்தவரும் எனது அப்பாவை தூக்கி உட்கார வைத்ததாலும் எனது அப்பாவிற்கு பின் மண்டையிலும், வலது காதில் இருந்து இரத்தம் வந்ததாகவும் எனவே 108 ஆம்புலன்ஸ் மூலம் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததாகவும் எனது அப்பாவிடம் நான் பேசுவதாகவும் தெரிவித்தார். உடனடியாக நான், எனது அக்கா மற்றும் தங்கை பஸ் ஏறி திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனை வந்து எனது அப்பாவை பார்த்தோம். எனது அப்பா பேச்சு மூச்சு இல்லாமல் இருந்தார். மருத்தவர் எனது அப்பா சீரியசாக இருப்பதாகவும், மதுரை அல்லது விருதுநகர் கொண்டு செல்லும்படி தெரிவித்தார். அதன்படி நாங்கள் என் அப்பாவை மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு போய் சேர்த்தோம். 05.05.2024 ம் தேதி பகல் 01.30 மணியளவில் என் அப்பாவை சேர்த்தோம். அங்குள்ள மருத்துவர் எனது அப்பாவை பரிசோதித்துவிட்டு பகல் 02.35 மணியளவில் எனது அப்பா இறந்துவிட்டதாக தெரிவித்தார். எனது அப்பாவை திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் வைத்து நான் பார்த்தபோது வன்னியம்பட்டி போலிசார் அங்கு வந்தார்கள். எனது அப்பா சுயநினைவின்றி இருந்ததால் நடந்த சம்பவத்திற்கு நான் ஒரு புகார் மனு கொடுத்தேன். நான் கொடுத்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். எனது அப்பாவின் மீது மோதிய அரசுப் பேருந்தை ஓட்டிய நபர் முருகன் என்று தெரிந்து கொண்டேன். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. அதனால் சம்பவ இடத்தில் எந்த வாகனம் எப்படி வந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது. 04.05.2024 ம் தேதியில் ஒரே காரில் நாங்கள் 10 பேர் கோவிலுக்கு வந்தோம். மேற்படி விசயத்தை போலிசார் விசாரிக்கும் போது சொல்லியிருக்கிறேன். மம்சாபுரத்தைச் சேர்ந்த தங்கராஜ் என்பவரும் கோவிலில் இருந்தார். நாங்கள் வீட்டிற்கு செல்லும்போது என் அப்பாவை முகவூரில் இறக்கிவிட்டுச் சென்றோம். மறுநாள் அதிகாலை 05.00 மணிக்கு தீர்த்தம் வாங்குவதற்காக கிளம்பி மம்சாபுரம் வந்தார். மேற்படி விசயத்தையும் போலிசார் விசாரிக்கும் போது சொல்லியுள்ளேன். மம்சாபுரத்தில் இருந்து சுடலை மாடசாமி கோவில் சுமார் அரைக் கிலோ மீட்டர் தூரம் இருக்கும். அந்தக் கோவில் தெற்கு பார்த்துள்ளது. விபத்து நடந்த இடம் இராஜபாளையம், திருவில்லிபுத்தூர், மம்சாபுரம் ஆகிய ஊர்கள் சந்திக்கும் இடமாகும். மேற்படி புதுப்பட்டி என்பது பேருந்து நிறுத்தம் உள்ள இடமாகும். மேற்படி இடத்திற்கு இருபுறமும் சுப்புராஜ் காட்டன் மில் உள்ளது. அங்கு காவல் துறையின் பேரிகார்டுகள் உள்ளன. திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் இருந்து விபத்து குறித்து தங்கராஜ் என்பவர் தான் எனக்குப் போன் செய்தார். நான் சொன்னது போல் 04.05.2024 ம் தேதியில் நாங்கள் குடும்பத்தோடு மம்சாபுரத்தில் உள்ள கோவிலுக்கு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பாவிற்கு மது அருந்தும் பழக்கம் இல்லை. என் அப்பா அன்று இரவு தங்கராஜ் வீட்டில் தங்கி இரவு முழுவதும் மது அருந்திவிட்டு சாலையைக் கவனக்குறைவாக கடந்ததால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அருளாட்சி செல்லக்கூடிய கே எஸ்

ஆர் பேருந்து எம்.புதுப்பட்டி நிறுத்தத்தில் இருந்து இராஜபாளையம் செல்வதற்காக புறப்படத் தயாராக இருந்தபோது என் அப்பா தான் சாலையை கவனிக்காமல் பேருந்தில் ஏற முயற்சித்தார் என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா சாலையில் வரும் வாகனங்களை பார்த்துக் கடந்திருந்தால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது என்று சொன்னால் சரியல்ல. புகார் மனுவை போலிசார் எழுதினார்கள், நான் கையெழுத்துப் போட்டேன். புகார் மனுவில் உள்ள விசயங்கள் எனக்குத் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. விபத்து நடந்த அன்று திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் வைத்து போலிசார் என்னை விசாரித்தார்கள், அதன் பிறகு என்னை விசாரிக்கவில்லை. என் அப்பாவின் இறப்பிற்கு நஷ்ட ஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. நான் அதிக நஷ்ட ஈடு வாங்குவதற்காக பார்க்காத சம்பவத்தை பார்த்தது போல் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தங்கராஜ் என் அப்பாவை இறக்கிவிட்டு போய்விட்டார் என்றும், அதனால் அவர் எங்களுக்கு தகவல் எதுவும் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. அரசு மருத்துவமனையில் இருந்து போலிசார் தான் எனக்கு தகவல் சொன்னார்கள் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 09th day of January 2026.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

M VEERANAN

Digitally signed by M VEERANAN
Date: 2026.01.19 11:47:36 +0530

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**